**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.124/2022**

**வா.சா.1–பழனிச்சாமி**

**நாள்.22.01.2024**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்**

**1 முதல் 3, 16 மற்றும் 17 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் சின்ன சுப்பா கவுடரின் வாரிசு. சின்ன சுப்பாகவுடருக்கு 1908ல் கிரையம் வாங்கிய பத்திரம் தான் மூல பத்திரம் என்றால் சரியல்ல. மேற்படி பத்திரம் தான் மூல பத்திரம் என்றும், அந்த பத்திரத்தை நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து ஆதியில் நாககரியகவுடர் மற்றும் பாப்பைய கவுடர் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் இல்லை. நாககரியகவுடருக்கு மட்டும் தான் பாத்தியப்பட்டது. பெரியசுப்பா கவுடருக்கு பழனிக்கவுடர், முத்துச்சாமி என்ற இருமகன்கள் என்றால் மூன்று மகன்கள் , மற்றொருவர் வெள்ளைச்சாமி கவுடர். வெள்ளைச்சாமி கவுடர் இறந்துவிட்டார். பழனிக்கவுடர் மகன்கள் தான் சுப்பாகவுடர் மற்றும் சின்னச்சாமி என்றால் சரிதான். பெரிய சுப்பாகவுடரின் மகனான முத்துச்சாமியின் பேரன் தான் 2ம் பிரதிவாதி முத்துச்சாமி என்றால் சரிதான். பாப்பையகவுடருக்கு 4 முதல் 9, 16 முதல் 20 பிரதிவாதிகள் வாரிசுகள் என்றால் சரிதான். தாவா சொத்துகளில் காளிமுத்து, கோமதி தவிர அனைத்து பிரதிவாதிகளும் கடந்த 75 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, 30,40 வருடங்களுக்காக தான் இருக்கும். அவர்கள் 1905 லிருந்தே எனக்கு தெரிந்து வீடு கட்டி சட்ட காலத்திற்கும் அதிகமாக குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 12ம் பிரதிவாதி ராமுத்தாய் கோவில் பூசாரி, வழக்கு சொத்திற்கும் அவருக்கும் சம்பந்தமில்லை என்றால் சம்பந்தமில்லை, ஆனால் நிறைய ஆக்கிரமிப்பு செய்துள்ளார். பிராது பாரா 6ல் தாவா சொத்தான 2.83 ஏக்கர் நிலமான கோவிந்தசாமி, பெரிய சுப்பாகவுடர், பாப்பைய கவுடர், மாசி கவுடர் ஆகியோர்கள் 70 3/4 செண்ட் நிலத்தை கண்டேத்தமாக பாகப்பிரிவினை செய்துள்ளார் என்றால் சரியல்ல. 23.07.1984ல் தான செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் கோவிலுக்கு வீடும், நிலமும் தாவா சொத்தில் மு.காளியப்பகவுடர், ப.காளியப்ப கவுடர் ஆகியோர்களால் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதை எதிர்த்து நான் பரிகாரம் ஏதும் கேட்டுள்ளேனா என்றால் கேட்கவில்லை. நாககரியகவுடரின் பாகமான 1.33 ஏக்கர் 6ல் 1 பாகம் 22 செண்ட் நிலத்தை நாககரியகவுடரிடமிருந்து கோ.பெரியசுப்பாகவுடர்,

மா.பழனிக்கவுடர் 21.04.1898 ம் தேதியில் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல. சுப்பாகவுடர் தான் வாங்கியுள்ளார், பெரிய சுப்பாகவுடர் வாங்கவில்லை. 1905 ம் ஆண்டில் தொ.பாப்பையகவுடர் மேற்படி நாககரியகவுடரிடம் மீதமுள்ள 5 பாகமான 1 ஏக்கர் 11 செண்டை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் இல்லை என்றும், தொடச்சியகவுடர் கிரையம் வாங்கியது என்றால் சரியல்ல. பாப்பையகவுடர் தாவா சொத்தில் 2 ஏக்கர் 17 செண்டை அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்து ஆரம்பத்தில் விவசாய நிலமாக இருந்தது, தற்போது வீடுகள் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் அவரவர் பங்குப்படி நாங்களும், பிரதிவாதிகளும் வீடுகட்டி அனுபவித்து வருகிறோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 32 வீடுகள் உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாக்கல் செய்த வரைபடத்தை நான் பார்த்தேன், அது தவறாக உள்ளது. அது சம்பந்தமாக நான் எவ்வித ஆட்சேபணையும் தாக்கல் செய்யவில்லை. 1925 ம் ஆண்டு ஆவணத்தின்படி பாப்பையகவுடரின் 1.5 ஏக்கர் நிலமும் சேர்த்தால் 8.83 ஏக்கர் நிலம் என்றால் சரியல்ல. வாதிகளான எங்களுக்கும், மாசியகவுடருக்கும் சேர்த்து மூல ஆவணங்கள் படி மொத்தமே 44 செண்ட் தான் பாத்தியம் என்றால் சரியல்ல. 21 ம் பிரதிவாதி பூங்கொடி பாப்பம்மாளின் மகன் ரெங்கசாமி என்பவரின் மருமகள் என்றால் சரிதான். 14,15,21 ம் பிரதிவாதிகளுக்கு 35 செண்ட் நிலம் கிரையம் வாங்கி, அதில் வீடு கட்டி மின் கட்டணம், வீட்டு வரி செலுத்தி வருகிறார்கள் என்றால் அனுபவித்து வருகிறார்கள், ஆனால் 2000 க்கு பிறகு தான் வீடு கட்டினார்கள். 1945 லிலேயே கிரையம் வாங்கி வீடு கட்டி அனுபவித்து வருகின்றனர் என்றால் சரியல்ல. 21.04.1898 ம் தேதி நாககரியகவுடர் கிரையம் பெற்ற தொ.பெரியசுப்பாகவுடர், மா.பழனிக்கவுடரின் வாரிசுகளான சுப்பாகவுடர், சின்னச்சாமி இருவருக்கும் பாத்தியப்பட்டு அனுபவித்து வந்து அதை சுப்பாகவுடர் மகன் 1 ம் பிரதிவாதி பிச்சைமுத்து சின்னச்சாமியின் வாரிசான 3 ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.17 ஆவணத்தின் படி எனக்கு மொத்தமே 44 செண்ட் நிலம் தான் பாத்தியம் என்றும், அதற்கு பிந்தே ஆவணங்களை உற்பத்தி செய்து கொண்டுள்ளோம் என்றால் சரியல்ல. என் சகோதரிகளை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வீடு கட்டி அனுபவித்து வரும் செல்லப்பாண்டியன், 17 ம் பிரதிவாதியின் தம்பி பழனிச்சாமி ஆகியோர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவர்கள் நீண்ட காலத்திற்கு முன்பே வெளியேறிவிட்டார்கள். வழக்கு சொத்தில் வீடு உள்ளது என்றும், அதனை அப்புறப்படுத்த வேண்டி பரிகாரம் ஏதும் கேட்காததால் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. 13 ம் பிரதிவாதியான என் தம்பி ராமமூர்த்தி தாவா சொத்தில் வீடு கட்டி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 14 ம் பிரதிவாதி

சுப்பிரமணி வாங்கிய கிரைய பத்திரத்தில் என் தம்பி ராமமூர்த்தி சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றும், அந்த பத்திரம் செல்லாது என்று நான் பரிகாரம் ஏதும் கேட்கவில்லை என்றால் சரிதான். 14,15,21ம் பிரதிவாதிகள் தொட்டைய கவுடரின் வாரிசுகள் என்றால் சரிதான். அவர்கள் தாவா சொத்தில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.4,5 மற்றும் 6 ஆவணங்களில் தாய் பத்திரத்தை மீறி கூடுதல் விஸ்தீரணம் போட்டு எழுதிக்கொண்டுள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் பிரதிவாதிகள் தான் 75 ஆண்டு காலமாக வீடு கட்டி , வீட்டு வரி, மின் இணைப்பு கட்டணம் மற்றும் குடிநீர் வரி ரசீதுகள் கட்டி அனுபவித்து வருகிறார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் 2017க்கு பிறகு தான் அனுபவித்து வருகிறார்கள். அவர்களை பட்டா வாங்க விடாமல் நான் தான் இடையூறு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் தென்புறத்தில் தென்னை மரங்கள் உள்ள எங்களது நிலம் உள்ளது என்றால் தெற்கே என் தம்பி நிலம் உள்ளது, மேற்கே தான் எனது நிலம் உள்ளது. அந்த நிலத்திற்கு தான் நான் சொன்ன விஸ்தீரணம் கட்டுப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்து கட்டுப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு நான் தான் சாலை மற்றும் சாக்கடை போட விடாமல் இடையூறு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் பிரதிவாதிகள் வீடு கட்டி அனுபவித்து வருவதால் அதில் எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**4 முதல் 9, 12,13,14,15, 18 முதல் 21ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை – மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்.**

**மறுவிசாரணை – இல்லை**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.01.22 18:29:40 +0530

Additional District Judge,

Dindigul.